2020 செப்டம்பர் 16] [திரு. S. செம்மலை]

நியமித்ததற்கு உங்களுக்கும் நன்றி தெரிவித்து, தங்களுடைய மேலான அனுமதியோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2021 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய 120 முதல் 136 வரையிலான 17 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

பிற்பகல் 1–30

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழுவினுடைய தலைவராக மீண்டும் என்னை நியமனம் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் தலைவராகிய உங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை புலப்படுத்திக் கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2021 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 78-வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எனக்கு 2–00 மணிக்குள் எல்லாவற்றையும் முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நிதியொதுக்கச் சட்டமுன்வடிவு முடியட்டும், உட்காருங்கள், பிறகு பார்க்கலாம். (குறுக்கீடுகள்) பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் உறுதியெல்லாம் தர முடியாது, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பார்க்கலாம். (குறுக்கீடுகள்) பார்க்கலாம், நேரம் இல்லை அல்லவா? (குறுக்கீடுகள்) 2–00 மணிக்குள் நிதியொதுக்கச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, நேரம் இல்லை. அதையெல்லாம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதற்கெல்லாம் உறுதியெல்லாம் சொல்ல முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*